THIRU B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister, it appears that there is no dearth of Telugu Pandits. May I request the Hon. Minister to state how many qualified Telugu Pandits are now working in Telugu schools in the State of Tamil Nadu?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: The Hon. Minister said that he would invite Telugu Pandits from Andhra State, in case need for Telugu Pandits arise here. May I say that even in Andhra Pradesh, there is dearth of qualified Telugu pandits. If we permit Telugu candidates here to appear privately and pass Vidwan examination, we will be encouraging our own people in Madras State. They can appear and pass the examination and become Telugu Pandits in Madras State itself?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் சொல்லியபடி ஒரு பள்ளி வைக்க யாராவது தனியார் பல்கலைக் கழக அனுமதியோடு முன்வந்தால் நாமும் அனுமதி வழங்க முற்படலாம்.

M. N. O.-க்களுக்கு சீருடை.

* 237 வினா.—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

அரசாங்க மருத்துவ மனைகளில் **M. N. O.**க்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. பி. எஸ். மணியன்: சீருடை வழங்குவது சட்டத்தில் இருந்தாலும் கூட மதுரை போன்ற அரசாங்க மருத்துவ மனையில் சீருடை வழங்கப்படாத காரணத்தினால், உள்ளே உள்ளவர் களுக்கும், வெளியில் உள்ளவர்களுக்கும் வித்தியாசம் தெரியாத நிலை இருப்பதால், உடனடியாக சீருடை வழங்கும் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மதுரை நகரத்தில் சீருடை வழங்கப்படுகிறது. சுற்றுப்புற நகரங்களில் எப்படி இருக்கிறதோ! ஆயினும், இதுபற்றி குறிப்பிட்டு, எந்த இடத்தில் என்பதை கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் இரண்டாண்டுக் காலமாக சீருடை வழங்கப்படவில்லை என்பதை நானே தெரிவித்திருந்தேன். அப்படி யின்றி தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுதோறும் வழங்கும் ஒருமுறை தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எங்காவது குறைபாடு இருந்தால் சுட்டிக்காட்டினால், அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனை.

* 238 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம், எக்ஸ்ரே பகுதி, போன்றவை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமங்கலத்தில் இரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ் கதிர் வீச்சு நிலையக் கட்டடமும் கட்டும் திட்டம் 1970-71 நிதியாண்டில் பரிசீலனைக்காக ஒத்திப் போடப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : வளர்ந்து வரும் மக்கள் தொகையைக் கருத்தில்கொண்டு திருமங்கலம் தாலுக்கா தலைநகரமாக இருப்பதால் ரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ்-ரே நிலையமும் விரைவாக ஏற்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் 1966-லேயே ரத்த நிலையம் ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. 1967-68-இல் எக்ஸ்-ரே நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. 1968-69-ல் இந்த இரண்டையும் ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அகதிகள்.

* 239 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானலில் இலங்கை அகதிகளைக் குடியேற்றி விவசாயம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) கொடைக்கானல் தாலுகாவிலுள்ள வண்டரவ் காட்டில் தேயிலைத் தோட்டம் அமைக்கும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : இலங்கையில் இருந்து இதுவரையிலும் எத்தனை அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் ? அவர்கள் எங்கு எங்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ?